

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 27

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: அகபாவின் முதல் உறுதிமொழி
- பகுதி 2: முஸ்அப் இப்னு உமைர் யத்ரிபிற்கு செல்லுதல் மற்றும் முதல் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை
- பகுதி 3: உஸைத் இப்னு ஹுதைர் இஸ்லாத்தைத் தழுவுதல்
- பகுதி 4: ஸஅத் இப்னு முஆத் இஸ்லாத்தைத் தழுவுதல்
- பகுதி 5: அகபாவின் இரண்டாவது உறுதிமொழிக்கான ஏற்பாடு
- பகுதி 6: நபி (ஸல்) அவர்கள் யத்ரிப் மக்களுக்கு ஆற்றிய உரையும், அவர்களின் பதிலும்
- பகுதி 7: ஒரு நெகிழ்ச்சியான உரை மற்றும் மதீனாவுக்குச் செல்லும் முயற்சியை மேற்கொள்ளல்

## பகுதி 1: அகபாவின் முதல் உறுதிமொழி

- நபி (ஸல்) அவர்களைச் சந்தித்த கஸ்ரஜ்வாசிகள் ஆறு பேரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் தாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதை அவர்கள் வெளியே தெரிவிக்கவில்லை. அடுத்த ஆண்டு திரும்பி வருவதாக அவர்கள் உறுதி கூறியிருந்தனர்.

- யத்ரிபில் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று, இஸ்லாத்தின் செய்தியைப் பரப்பத் தொடங்கினர்.

- அடுத்த ஆண்டு (நபித்துவத்தின் 12வது ஆண்டு) இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மொத்தம் 12 பேருடன் ஹஜ்ஜுக்கு வருவதாக நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினர்.



- அழைப்புப்பணி தொடங்கியதிலிருந்து மக்காவிற்கு வெளியே இருந்து இஸ்லாத்திற்கு வந்தவர்களின் மிகப்பெரிய எண்ணிக்கை இதுவாகும்.

- அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த 10 பேர் மற்றும் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த 2 பேர் ஆவார்கள்.

- 3 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒருவருக்கொருவர் கடுமையான எதிரிகளாக இருந்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் மக்கள், மெதுவாக தங்கள் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய மதத்தை ஏற்றுக்கொள்ள ஒன்றாக வரத் தொடங்கினர் என்பதையும் இது காட்டுகிறது.

- 🌲 12 பேர் அகபா சமவெளியில் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தனர். முதன்முதலில் இதுவே முறையாக இஸ்லாத்தைத் தழுவும் நிகழ்வாக இருந்தது. இது அகபாவின் முதல் உறுதிமொழி என்றும் அழைக்கப்படுகிறது.

- 🌲 இது பெண்களின் உடன்படிக்கை (பைஅத் அன்னிஸா) என்றும் அழைக்கப்பட்டது. போர்கள் அல்லது பாதுகாப்பு போன்ற எந்த அரசியல் விளைவுகளும் இல்லாத ஒரு உறுதிமொழி இது என்பதால் இந்த பெயரிடப்பட்டது. இத்தகைய உறுதிமொழிகள் பொதுவாக பெண்களால் எடுக்கப்படும்.

- 🌲 நபி (ஸல்) அவர்களிடம் யத்ரிபிலிருந்து வந்த இந்த 12 பேர் விசுவாசமாக இருக்க உறுதிமொழி எடுத்துக்கொண்டனர் – அல்லாஹ்வை மட்டும் வணங்குதல், விபச்சாரம் செய்யாமல் இருத்தல், திருடாமல் இருத்தல், குழந்தைகளைக் கொல்லாமல் இருத்தல். மேலும், ஒழுக்கமான மற்றும் நீதியான வாழ்க்கையை நடத்துதல், தொழுகையை நிலைநாட்டுதல் மற்றும் அனைத்து நல்ல விஷயங்களிலும் நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பனவற்றையும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

- 🌲 உறுதிமொழி எடுத்தவுடன், அந்த 12 பேரும் இஸ்லாத்தின் ஞானம் நிறைந்த ஒரு முஸ்லிமை தங்களுடன் அனுப்பி, யத்ரிப் மக்களுக்கு இஸ்லாத்தை பரப்புவதற்கு நபி (ஸல்) அவர்களிடம் உதவி கோரினர்.

## பகுதி 2: முஸ்அப் இப்னு உமைர் யத்ரிபிற்கு செல்லுதல் மற்றும் முதல் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை



- நபி (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுத்து, தொழுகை நடத்துவதற்காக, முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்களை யத்ரிப் செல்லத் தேர்ந்தெடுத்தார்கள்.

- முஸ்அப் யத்ரிபை அடைந்த சில வாரங்களுக்குள், கிட்டத்தட்ட 40 பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

- இந்தத் தகவல் நபி (ஸல்) அவர்களுக்கு எட்டியபோது, அவர்கள் ஜும்மா தொழுகையை நிலைநாட்டக் கூறி ஒரு செய்தியை அனுப்பினார்கள்.

- எனவே இஸ்லாமிய வரலாற்றில் முதல் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை முஸ்அப் இப்னு உமைர் யத்ரிபில் நடத்தினார். யத்ரிப் பின்னர் மதீனா என்று அழைக்கப்பட்டது.

- அஸ்அத் இப்னு ஜுராராவின் வீட்டில்தான் முஸ்அப் வசித்து வந்தார். மேலும் அவரது வீட்டில்தான் ஜும்மா தொழுகை நடத்தப்பட்டது.

- இவ்வாறாக இஸ்லாம் வேகமாக பரவியதன் மூலம், அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கிளைகளின் ஒவ்வொரு துணைக் கோத்திரத்தினர் வீடுகளிலும் ஒரு முஸ்லிமாவது இருக்கும் நிலை உருவானது.

## பகுதி 3: உஸைத் இப்னு ஹுதைர் இஸ்லாத்தைத் தழுவுதல்

- குறிப்பாக இரண்டு பேர் இஸ்லாத்தைத் தழுவியது, யத்ரிப் மக்களிடையே பெருமளவு இஸ்லாத்திற்கு வருவதற்கு வழிவகுத்தது.

- இந்த இருவரும் யத்ரிபின் வளர்ந்து வரும் தலைவர்கள் – ஸஅத் இப்னு முஆத் மற்றும் உஸைத் இப்னு ஹுதைர்.

- ஸஅத் மற்றும் உஸைத் இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். ஸஅத், உஸைத்திடம், ‘‘இந்த புதிய மதம் நமது முன்னோர்கள் நமக்குக் கற்பித்ததற்கு எதிரானது. இது நமது குடும்பங்களைப் பிரிக்கிறது’’ என்றும் கூறினார்.

- ஸஅத் தொடர்ந்து கூறினார்: ‘‘எனது உறவினர் அஸ்அத், மக்காவிலிருந்து வந்த இந்த முஸ்அப்பை தனது வீட்டில் தங்க வைத்துள்ளார்.

- அஸ்அத் என் உறவினர் என்பதால், என்னுடைய சொந்த உறவினர் வீட்டிலிருந்து மக்கா இனத்தவரை வெளியேற்றுவது எனக்கு சங்கடமாக இருக்கிறது. எனவே, நீங்கள் ஏன் அங்கு சென்று முஸ்அப்பை நமது ஊரிலிருந்து வெளியேற்றக்கூடாது?''.

- உடனே உஸைத் தனது ஈட்டியை எடுத்துக்கொண்டு அஸ்அத்தின் வீட்டிற்குச் செல்கிறார்.

- அவர் வருவதைக் கண்ட அஸ்அத், முஸ்அப்பிடம், ''இவர் கஸ்ரஜின் தலைவர்களில் ஒருவர்; அவர் தனது ஈட்டியுடன் வருகிறார்'' என்று கூறுகிறார்.



- உஸைத் வந்ததும், அவர் முஸ்அபிடம் நேரடியாக, ''எங்கள் நிலத்திற்கு ஏன் வந்தீர்கள்? எங்கள் மக்களை மூளைச்சலவை செய்து, எங்கள் பெண்களை அவர்களின் குழந்தைகளிடமிருந்து பிரிக்க வந்தீர்களா? உங்கள் உயிரை நீங்கள் மதிக்கிறீர்கள் என்றால், நீங்கள் உங்கள் இடத்திற்கு திரும்பிச் செல்லுங்கள்!'' என்று கூறினார்.

- முஸ்அப் ஈமானால் மட்டுமே தரக்கூடிய அமைதியையும், நம்பிக்கையையும் கொண்டு பதிலளித்தார், ''நான் சொல்வதை நீங்கள் ஏன் உட்கார்ந்து கேட்கக்கூடாது?''

- உங்களுக்கு அது சரியென்று தோன்றினால், நல்லது. இல்லையென்றால், நான் நிறுத்திவிடுகிறேன்''. உஸைத் அமைதியடைந்து, இந்தக் கோரிக்கையை நியாயமானதாகக் கருதினார். ஆதலால், முஸ்அப் கூறுவதைக் கேட்க அங்கு அமர்ந்துவிட்டார்.

- பின்னர் முஸ்அப் அவருக்கு இஸ்லாத்தின் அடிப்படைச் செய்திகளைப் போதித்தார்; சில நிமிடங்களில் உஸைத் இஸ்லாத்தைப் புரிந்துகொண்டு, ''நீங்கள் சொல்வது முற்றிலும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. நான் எப்படி இஸ்லாத்திற்கு வருவது'' எனக் கேட்டார்.

- முஸ்அப் அவரை ஒளு செய்யச் சொன்னார்; ஷஹாதா கலிமா சொல்லச் சொன்னார்; பின்னர் இரண்டு ரக்அத் தொழச் சொன்னார். அவர் இதைச் செய்து முடித்தார். பின்னர் உஸைத், ''என்னை உங்களிடம் அனுப்பிய ஒருவர் இருக்கிறார். இதை நீங்கள் அவருக்கு போதித்து, அவரை சமாதானப்படுத்த முடிந்தால், உங்களுக்கு எந்த எதிர்ப்பும் இருக்காது'' என்றார்.

- முஸ்அப், ''போய் அவரை என்னிடம் அனுப்புங்கள்'' என்றார்.

## பகுதி 4: ஸஅத் இப்னு முஆத் இஸ்லாத்தைத் தழுவுதல்

- உஸைத் தனது நண்பர் ஸஅத்திடம் திரும்பிச் சென்றார். ஸஅத் அவரைப் பார்த்ததும், ''இவர் நம்மிடமிருந்து சென்றபோது இருந்த நிலை மாதிரி இப்போது தெரியவில்லையே! அவரது முகம் மாறிவிட்டதே'' என்றார்.

- பின்னர் ஸஅத், ''என்ன? நீ சென்ற காரியம் வெற்றி அடைந்ததா?'' என்று கேட்க, உஸைத், ''நான் அவனுடன் பேச முயற்சித்தேன், ஆனால் நீ ஏன் முயற்சி செய்யக்கூடாது?'' என்று பதிலளித்தார்.

- இந்த விஷயத்தை துரிதமாக்க, அவர் மேலும், ''முஸ்அபை தங்க வைத்ததற்காக ஒரு குறிப்பிட்ட பழங்குடியினர் உங்கள் உறவினர் அஸ்அத்தை கொலை செய்ய சபதம் செய்துள்ளதாகவும் நான் கேள்விப்பட்டேன்'' என்று கூறினார்.



- எனவே ஸஅத் பதறிப்போய் உடனடியாக தனது ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தனது உறவினர் அஸ்அத்தின் வீட்டிற்குச் சென்றார்.

- அவர் அஸ்அத்தின் வீட்டிற்குள் நுழைந்து, ''ஓ அஸ்அத்! நீ என் உறவினராக இல்லாவிட்டால், இந்த ஆயுதங்கள் என் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருக்காது. நமது இரத்த உறவின் காரணமாக மட்டுமே நான் இந்த விஷயத்தை மேற்கொண்டு எடுத்துச் செல்லவில்லை. அதனால், உன் விருந்தினரை உடனே இந்த ஊரை விட்டு வெளியேறச் சொல்'' என்றார்.

- அஸ்அத் பதிலளிப்பதற்கு முன்பே முஸ்அப் குறுக்கிட்டு, ''குறைந்தபட்சம் நான் சொல்வதையாவது சிறிது கேளுங்கள். உங்களுக்கு அது சம்மதமாக இருந்தால், நல்லது. இல்லையென்றால், நான் நிறுத்தி விட்டு, உடனே இந்த இடத்தை விட்டு வெளியேறுகிறேன்'' என்றார்.

- அவரது துணிச்சலையும், தன்னம்பிக்கையையும் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்த ஸஅத், அவரின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டு அமர்ந்தார். இந்த முறை, முஸ்அப் குர்ஆனிலிருந்து ஸூரா ஜுக்ருஃப் (43) வசனங்களை ஓதினார். குர்ஆன் ஸஅத்தின் இதயத்தை மென்மையாக்கியது; அவர் உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

- ஸஅத் மற்றும் உஸைத் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, யத்ரிபில் உள்ள மிகப்பெரிய சமூகங்களின் ஒன்றான கஸ்ரஜின் ஒரு துணைக் கோத்திரம் முழுவதும் இஸ்லாத்தைத் தழுவியது.

- யத்ரிப் முழுவதும் இஸ்லாம் வேகமாகப் பரவத் தொடங்கியதால், ஹஜ்ஜின் அடுத்த ஆண்டு அதாவது நபித்துவத்தின் 13வது ஆண்டில், முஸ்அப் தன்னுடன் 75 முஸ்லிம்களை, நபி (ஸல்) அவர்களுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய அழைத்து வந்தார்.

- இந்த 75 பேர்கள் தான் ஹஜ் செய்ய முடிந்தது. அப்போது யாத்ரிபில் குறைந்தபட்சம் 250 முதல் 300 பேர் முஸ்லிம்களாக இருந்திருப்பார்கள் என்று அறிய முடிகிறது.

## பகுதி 5: அகபாவின் இரண்டாவது உறுதிமொழிக்கான ஏற்பாடு

- அன்சாரிகளைச் சேர்ந்த பிரபல தோழர்களில் ஒருவரான ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) கூறுகிறார்கள்: ''யத்ரிப் மக்களிடையே முஸ்லிம்கள்

இல்லாமல் எந்தக் துணைக் கோத்திரமும் இல்லை என்ற அளவுக்கு யத்ரிபில் இஸ்லாம் வேகமாகப் பரவி வந்தது.

- பின்னர் அல்லாஹ் எங்களை ஒன்று சேர்க்கச் செய்தான். நாங்கள், ‘‘எவ்வளவு காலம் நபி (ஸல்) அவர்கள் துன்பங்களை அனுபவிக்கவும், விரட்டியடித்து கேலி செய்யப்படவும், அவர்களது உயிருக்கு பயந்து வாழவும் அனுமதிக்க முடியும். நபி (ஸல்) அவர்களை யத்ரிபிற்கு வருமாறு நாம் ஏன் கேட்கக்கூடாது’’, என்று பேசிக்கொண்டோம்.

- ஹஜ் காலம் வந்தபோது, ஹஜ்ஜின் கடைசி இரவில், அதிகாலைத் தொழுகைக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, அகபா பள்ளத்தாக்கிற்கு அருகில், நபி (ஸல்) அவர்கள் யத்ரிபின் 75 பேர்களைச் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

- கஅப் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஜ்ஜின் கடைசி இரவில், நாங்கள் ஒவ்வொருவராக எங்கள் கூடாரங்களிலிருந்து வெளியேறி அகபா பள்ளத்தாக்கில் ஒன்று கூடினோம்.



- நபி (ஸல்) அவர்கள் தனது சிறிய தந்தை அல் அப்பாஸுடன் அங்கு வந்தார்கள். அப்போது அல் அப்பாஸ் இஸ்லாத்தை ஏற்று இருக்கவில்லை.

- யத்ரிப் மக்கள் அங்கு கூடியிருப்பதைக் கண்ட அப்பாஸ், நபி (ஸல்) அவர்களிடம், ‘‘என் சகோதரர் மகனே! இந்த மனிதர்களில் யாரையும் எனக்குத் தெரியவில்லை. எனக்கும் இந்த சூழ்நிலை சரியாக தென்படவில்லை’’ என்று கூறினார்.

- அப்பாஸ், நபி (ஸல்) அவர்களைப் பற்றி கவலைப்பட்டார். மேலும் அங்குள்ள யத்ரிப் மக்களில் தனது வணிகத் தொடர்புகள் மூலம் தனக்கு தெரிந்த யாராவது இருக்கிறார்களா என அறிய விரும்பினார்.

- ஜாபிர் மேலும் அறிவிக்கிறார்: யத்ரிப் மக்கள் நபி (ஸல்) அவர்களின் முன் வந்தனர். நபி (ஸல்) அவர்களின் சார்பாக அப்பாஸ்தான் முதலில் பேச எழுந்தார்.

- அவர் கூட்டத்தினரிடம், ''ஓ கஸ்ரஜ் மக்களே! எங்கள் ஊரில் இந்த மனிதரின் நிலை உங்களுக்குத் தெரியும். எங்கள் மக்களுடன் நாங்கள் உடன்பட்டாலும் அவரை எங்கள் சொந்த மக்களிடமிருந்து நாங்கள் பாதுகாத்து வந்துள்ளோம். (சிலைகளை வணங்கும் மக்களுடன் நாங்கள் உடன்படுகிறோம்; ஆனால் நபிக்கு தீங்கு விளைவிக்காமல் தடுத்து வந்திருக்கிறோம்).

- அவருக்கு எங்களிடையே இஸ்ஸாவும் (மரியாதையும்), கண்ணியமும் உண்டு. அவருக்கு பாதுகாப்பும் உண்டு. ஆனால் அவர் எங்களை விட்டுவிட்டு, உங்களிடம் வருவதற்கு முடிவு செய்துள்ளார்.

- நீங்கள் அவருடன் இணங்கி வாழவும், அவருக்கு தீங்கு செய்ய விரும்புபவர்களிடமிருந்து அவரைப் பாதுகாக்கவும் உறுதியாக அளித்தால், நீங்கள் அவருடைய பொறுப்பை ஏற்க வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியாவிட்டால், அவரை விட்டுவிடுங்கள். மேலும், அவர் தனது மக்களிடையே மிகவும் மதிக்கப்படுகிறார் என்பதையும் நீங்கள் உணர வேண்டும்''.

- அப்பாஸ் தயக்கமாகவும், அதேநேரம் எச்சரிக்கையாகவும் இருந்தார். தனது சகோதரர் மகன் (ஸல்) அவர்கள் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இந்த நிலையை நினைத்து, அவர் சங்கடத்துடன் வேதனைப்பட்டார். ஆனால் அதே நேரத்தில் நபி (ஸல்) அவர்களின் கண்ணியமான அந்தஸ்தை வலியுறுத்துவதன் மூலம் அதனை ஈடுசெய்ய விரும்பினார்.

- யத்ரிபின் முஸ்லிம்கள், ''நீங்கள் பேசிவிட்டீர்கள். நபி (ஸல்) அவர்களை இப்போது பேச விடுங்கள். யா ரசூல் அல்லாஹ்! உங்கள் நிபந்தனைகளை முன்வையுங்கள்'' என்று பதிலளித்தனர்.

## பகுதி 6 : நபி (ஸல்) அவர்கள் யத்ரிப் மக்களுக்கு ஆற்றிய உரையும், அவர்களின் பதிலும்

- நபி (ஸல்) அவர்கள் பின்னர் எழுந்து நின்று குர்ஆனை ஓதி, அவர்களுக்குப் பிரசங்கம் செய்யத் தொடங்கி, அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

- பின்னர் அவர்கள், ‘‘நீங்கள் என்னை உங்கள் சொந்தக்காரராகப் பாதுகாப்பீர்கள் என்று எனக்கு நீங்கள் சத்தியம் செய்ய வேண்டும்’’ என்று கேட்டார்கள்.

- யத்ரிப் மக்களில் ஒருவர் எழுந்து நின்று, ‘‘நாங்கள் போர்க் கலைகளில் அனுபவம் வாய்ந்தவர்கள். இதை எங்கள் முன்னோர்களிடமிருந்து கற்றுக்கொண்டுள்ளோம்.

- இது ஒரு எளிதான நிபந்தனை. உங்கள் கையை நீட்டுங்கள்; நாங்கள் உங்களுக்கு உறுதிமொழி அளிக்கிறோம்’’ என்றார்.

- யத்ரிபிலிருந்து இன்னொருவர் எழுந்து நின்று தனது அறிவார்ந்த கருத்தாக, ‘‘யா ரசூல் அல்லாஹ்! யூதர்களுடன் எங்களுக்கு உறவுகள் உள்ளன. உங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், அந்த உறவுகள் துண்டிக்கப்படும்.

- எனவே, நீங்கள் எங்கள் பக்கம் வந்து, அல்லாஹ் நமக்கு வெற்றி அளித்தவுடன், எங்களை விட்டுவிட்டு மக்காவில் உள்ள உங்கள் மக்களிடம் திரும்பி வந்து விடுவீர்களா?’’

- நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்து, ‘‘இல்லை, என் இரத்தம், உங்கள் இரத்தம், என் அழிவு, உங்கள் அழிவு’’ என்றார்கள்.

- அதாவது நபி (ஸல்) அவர்கள் இது ஒரு நிரந்தர இடம்பெயர்வு என்று உறுதிப்படுத்தினார்கள். மேலும் அவர்கள் மக்காவிலிருந்து உறவுகளை துண்டித்தவுடன், அவர்கள் இறுதிவரை ஒரு மதானி – மதீனாவாசியாக இருப்பார்கள் என்று கோடிட்டுக் காட்டினார்கள்.

- யத்ரிப் மக்கள் மகிழ்ச்சியடைந்து நபி (ஸல்) அவர்களிடம் விசுவாசப் பிரமாணத்தை கூறுமாறு கேட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நீங்கள் வசதியான காலங்களிலும், கடினமான காலங்களிலும் செவிசாய்ப்பீர்கள், கீழ்ப்படிவீர்கள் என்று சத்தியம் செய்ய வேண்டும். மேலும், அல்லாஹ்வின் பாதையில் உங்கள் பணத்தைச்

செலவிடுவீர்கள், நன்மைக்கு கட்டளையிடுவீர்கள், தீமையைத் தடுப்பீர்கள், என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் உண்மையைப் பேசுவீர்கள், நான் யத்ரிபிற்கு வந்ததும், உங்கள் சொந்தக் குடும்பத்திற்கு உதவுவது போல, எனக்கும் உதவுவீர்கள்''.

- இதுதான் விசுவாசத்தின் அரசியல் உறுதிமொழி.

- யத்ரிப் மக்களிடமிருந்து ஒரு குரல், ''இதற்கு ஈடாக எங்களுக்கு என்ன கிடைக்கும்'' என்று கேட்டது.

- நபி (ஸல்) அவர்கள் அனைவரும் கேட்க விரும்பிய ஒரே வார்த்தையான ''அல்–ஜன்னா (சுவனம்)'' என்று சொன்னார்கள்.



- அவர்கள் அனைவரும் விசுவாசப் பிரமாணத்தை வழங்க எழுந்து நின்றனர்.

## பகுதி 7: ஒரு நெகிழ்ச்சியான உரை மற்றும் மதீனாவுக்குச் செல்லும் முயற்சியை மேற்கொள்ளல்

- ஆனால் யாரும் நபி (ஸல்) அவர்களிடம் கை கொடுப்பதற்கு முன்பு, யத்ரிபில் உள்ள தனது வீட்டில் முஸ்அப்பை தங்க வைத்த அஸ்அத் இப்னு ஜுராரா எழுந்து, நபி (ஸல்) அவர்களின் கையைப் பிடித்துக் கீழே வைத்துவிட்டார்.

✿ பின்னர் அவர் கூறினார், ''யத்ரிப் மக்களே! பொறுங்கள்.



✿ இந்த மனிதர் அல்லாஹ்வின் தூதர் என்பதை நாம் அறிந்துதான், நாம் இவ்வளவு தூரம் பயணித்து இங்கு வந்திருக்கிறோம்.

✿ அவருடைய மக்கள் அவரை வெளியேற்றியவுடன், நீங்கள் போரிட அழைக்கப்படுவீர்கள்.

✿ எனவே உங்கள் கழுத்துகள், வாள்களைச் சந்திக்கத் தயாராக இருந்தால், இப்பொழுது சென்று அவருக்கு விசுவாசப் பிரமாணம் கொடுங்கள். உங்களில் சிறந்தவர்கள் கொல்லப்படுவார்கள் என்பதையும், தந்தையர் தங்கள் மகன்களை இழப்பார்கள் என்பதையும், அவரை ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்களிடையே மரணங்கள் ஏற்படும் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

✿ நீங்கள் இதைச் செய்யத் தயாராக இருந்தால், அவருக்கு சத்தியம் செய்து கொடுங்கள். இல்லையென்றால், இப்போதே நிறுத்துங்கள், ஒருவேளை நீங்கள் சத்தியம் செய்யாததற்கு அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக!''.

✿ இது மிகவும் நெகிழ்ச்சியான உரையாகும். மேலும் யத்ரிப் மக்கள் என்ன பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்பதை சரியாக வெளிப்படுத்தியது. அன்றிலிருந்து அவர்கள் எதையும் பின்னோக்கிப் பார்க்க வேண்டியதில்லை என்பதையும் அது தெளிவுபடுத்தியது.

✿ யத்ரிப் மக்கள், ''ஓ அஸ்அத்! நீங்கள் எல்லாவற்றையும் பேசிவிட்டீர்கள். நபி

(ஸல்) அவர்களின் கையிலிருந்து உங்கள் கையை அகற்றுங்கள். நாங்கள் எங்கள் கைகளை வைத்து பிரமாணத்தை அளிக்க விரும்புகிறோம்'' என்று கூறினர்.

- இவ்வாறாக, 73 ஆண்களும் ஒவ்வொருவராக நபி (ஸல்) அவர்களிடம் தங்கள் கையை கொடுத்து விசுவாசப் பிரமாணத்தை அளித்தனர். அதற்குப் பகரமாக, நபி (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு சொர்க்கத்தை உறுதியளித்தார்கள். அவர்கள் அதிகாரப்பூர்வமாக அன்சாரிகள் ஆனார்கள். அதாவது மதீனா மக்களிடமிருந்து உதவியாளர்கள் அல்லது ஆதரவாளர்கள் ஆவர்.



- அங்கு இருந்த இரண்டு பெண்களும் நபி (ஸல்) அவர்களை நோக்கி தங்கள் கைகளை உயர்த்தி, வாய்மொழியாக சத்தியம் செய்தனர்.

- சத்தியபிரமாணம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. மதீனாவுக்குச் செல்லும் பாதை நமது அன்பான நபி (ஸல்) அவர்களுக்கும், மக்காவின் முஸ்லிம்களுக்கும் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டது.

- அதன் பின்பு வாழ்நாள் முழுவதும், நபி (ஸல்) அவர்களின் இதயத்தில் அன்சாரிகள் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்திருந்தார்கள். அவர்கள் அன்சாரிகளை அடிக்கடி புகழ்ந்து பேசுவார்கள். நபி (ஸல்) கூறினார்கள், ''நான் மக்காவைச் சேர்ந்தவராக இல்லாவிட்டால், நான் அன்சாரிகளில் ஒருவராக இருந்திருப்பேன். அன்சாரிகள் ஒரு திசையிலும், அனைத்து மனிதகுலமும் மற்றொரு திசையிலும் சென்றால், நான் அன்சாரிகளுடன்

செல்வேன்.''

- மேலும் அவர்கள் கூறினார்கள், ''அன்சாரிகளை நேசிப்பது ஈமானின் அடையாளம்; அன்சாரிகளை வெறுப்பது நயவஞ்சகத்தின் ஒரு பகுதி''. (ஸஹீஹுல் புகாரீ

- அவர்களுக்காக அடிக்கடி துஆவும் செய்வார்கள்: ''யா அல்லாஹ்! அன்சாரிகளையும், அன்சாரிகளின் வாரிசுகளையும் மன்னிப்பாயாக!''